**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 2
Defence
Court

Name : சுரேந்திரன்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 24th August 2021.

முதல் விசாரணை:

நான் தென்காசியில், மீன் மார்க்கெட்டில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். இவ்வழக்கில் இறந்து போன சுரேஷ், சேகர், செந்தில் என்ற செந்தில்குமார் ஆகியோர்களை தெரியும். அவர்கள் எப்படி இறந்தார்கள் என்ற விவரம் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எந்த விவரங்களும் தெரியாது.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

இந்து முன்னனி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு இருந்து வருகிறேன் என்றும், குமார்பாண்டியன் என்பவரின் தம்பி செந்தில்குமார் என்பவரின் நண்பர்கள் என்றும், நான் போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றும், மேலும் ஹனிபா என்ற நாகூர் ஹனிபாவும், முருகேசன் என்ற அப்துல்லாவும், மற்றும் அவர்கள் கூட்டாளிகள்

அனைவரும் சேர்ந்து ஹனிபா வீட்டில் அடிக்கடி பேசி வருவதாகவும் தென்காசி கூளக்கடை பஜாரில் உள்ள வி.டி.எஸ் ரகுமான் பாட்சா கடையில் ஹனிபா என்ற நாகூர் ஹனிபாவும், முருகேசன் என்ற அப்துல்லாவும் ஹாஜி முஸ்தபா ஜவுளிக்கடையின் ஓனர் கமாலும், பஜாரில் கடைகள் அடைத்த பின்பு இரவு 10 மணிக்கு மேல் அடிக்கடி சந்தித்து பேசி வருவதாகவும் நான் போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால், சரியல்ல. அது பற்றி விசாரித்த போது அவர்கள் குமார் பாண்டியனின் தம்பிமார்களை தீர்த்துகட்டிவிட வேண்டும் என்று சதி திட்டம் தீட்டி வந்ததாகவும், மேலும் சம்பவத்திற்கு ஒருவாரத்திற்கு முன் கூளக்கடை பஜாரில் வைத்து வி.டி.எஸ் ரகுமான் பாட்ஷா, ஹாஜி முஸ்தபா ஜவுளிக்கடை ஓனர் காமலும், குமார் பாண்டியன் மனைவி ஜெயந்தியிடமும், குமார் பாண்டியன் அண்ணன் திருப்பதியிடமும் மிரட்டியதாக கேள்விபட்டோம் என்றும், அதனால் குமார் பாண்டியன் தம்பிமார்கள் வெளியே செல்லும் போது தனியாக செல்லக்கூடாது என்றும், கூட செல்லும் போது நண்பர்கள், யாரையாவது கூட்டிச்செல்ல வேண்டும், சக்திபாண்டியன் அண்ணன் குமார் பாண்டியனுக்கு சொந்தமான TN72 Z 9757 என்ற அம்பாசிஸ்டர் காரில் சக்திபாண்டியன், செந்தில் என்ற செந்தில்குமார், அவரது மச்சான் சுப்பிரமணியன், கபிலன் ஆகியோர்களும் தென்காசி கூளக்கடை பஜாருக்கு வந்ததாக நான் போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால், சரியல்ல. சக்திபாண்டியன் காரை ஓட்டி வந்தார் என்றும், மேலமுத்தாரம்மன் கோவில் பக்கம் காலை 10.15 மணிக்கு கிழக்கேயிருந்து மேற்க்காக நாங்கள் போகும் போது எதிரே மேற்கிலிருந்து கிழக்கு பார்த்து எதிரே TN72 X 0558 என்ற யமஹா மோட்டார் பைக்கை தென்காசி மவுண்ட் மீரான் மைதீன் மகன் அலாவூதீன் வேகமாக ஓட்டி வந்து எங்கள் காரின் மீது மோதி வழி மறித்தார்கள் என்றும், அந்த சமயம் அவனுக்கு பின்னால் நாகூர் மீரான் ஓட்டி வந்த TN 76 B 9529 என்ற ஆட்டோவில் முருகேசன் என்ற அப்துல்லா, பசீர், அசன் கனி, அபுஆயூப் அன்சாரி, ராஜா முகமது ஆகியோர்களும், ஹனிபா என்ற நாகூர் ஹனிபா ஓட்டி வந்த TN 76 B 4974 என்ற ஆட்டோவில் சையது அலி, மீரான் மைதீன், நவாஸ், சுலைமான் சேட் ஆகியோர்கள் மோதுவது போல் வந்து மறித்து நிறுத்தி மேற்படி அலாவூதினும், ஆட்டோவில் வந்தவர்களும் திபுதிபு என்று கையில் அருவாள், வீச்சருவாள், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் இறங்கி வருவதை பார்த்து, காரில் இருந்து நாங்கள் பயந்து போய் இறங்கி கிழக்கு பார்த்து ஓடினோம் என்றும், அப்போது எங்கள் காருக்கு பின்னால் வி.டி.எஸ்.ஆர். குடோனுக்கு கீழ்புறம் உள்ள சந்தில் இருந்து சம்சுதீன், பசுலுதீன், முகமுது இஸ்மாயில் ஆகியோர்கள் எங்களை ஓடவிடாமல் தடுத்து மறித்தார்கள் என்றும், நாங்கள் சுதாரித்து மேற்கு பக்கம் பார்த்து ஓடினோம் என்றும், சுரேஷ், சேகர், மற்றும் எங்கள் நண்பர்களும், குமார்பாண்டியன் தம்பிகளும் மேற்படி அலாவூதீன், ஹனிபா என்ற நாகூர் ஹனிபா, முருகேசன் என்ற அப்துல்லா,

அவர்களுடைய கூட்டாளிகளான ஜாபர், ஜவுளிக்கடை இஸ்மாயில், சுபாஹன், அவர்களுடைய கூட்டாளிகள் கையில் அருவாளாளுடன் விரட்டி வந்து குத்தி தாக்கினார்கள் என்றும் பதிலுக்கு நாங்களும் தாக்கினோம் என்றும் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால், சரியல்ல. செந்தில் என்ற செந்தில் குமார் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார் என்றும், கருப்பையா பிள்ளை மகன் முருகேசன் அப்துல்லா அருவாளால் சேகரின் வலது முழங்கை, இடது முழங்கையில் வெட்டினார் என்றும், சைய்யது அப்பா மகன் அசன்கனி கத்தியால் சேகரின் அக்குளில் குத்தினார் என்றும், முகைதீன் பிச்சை மகன் அபு ஆயூப் அன்சாரி அருவாளால் சேகரின் வலது முழங்கைக்கு மேலே வெட்டினார்என்றும், செங்கோட்டை முகமது மகன் ராஜா முகமது அருவாளால் சேகரின் வலது உள்ளங்கையிலும், வலது காதுக்கு கீழும் வெட்டினார் என்றும், சுரேசை பீர்முகமது மகன் பசீர் அருவாளால் வலது மணிக்கட்டு, மார்பு ஆகிய இடங்களில் வெட்டினார் என்று நான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால், சரியல்ல. மேலும் போலீஸ் விசாரணையில் நான் சாகுல் ஹமீது மகன் சையது அலி பட்டாக்கத்தியால் சுரேசின் முகத்தோடு சேர்த்து வெட்டினார் என்றும், முகமது ஹனிபா மகன் மீரான் மைதீன் அருவாளால் சுரேசின் கழுத்தில் வெட்டினார் என்றும், சம்பவ இடத்தில் சுரேஷ், சேகர் மற்றும் அசன்கனி இறந்து விட்டார்கள் என்றும், செந்தில் என்ற செந்தில்குமார் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார் என்றும், எதிர் தரப்பில் மேலும் இரண்டு நபர்கள் இறந்து விட்டார்கள் என்று கேள்விபட்டு தெரிந்து கொண்டேன் என்று நான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால், சரியல்ல. மேற்படி விவரங்கள் அனைத்தையும் நடந்த சம்பவங்களை பற்றி போலீசார் விசாரைணயில் வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரிகளும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் நாங்கள் சமாதானமாக போய்விட்டோம் என்பதால் அதன் அடிப்படையில் நடந்த சம்பவத்தை மறைத்து உண்மைக்கு மாறாக அரசு தரப்புக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் மதச்சார்பு உள்ள இயக்கங்களில் உறுப்பினராக இல்லை. இந்த வழக்கில் இறந்து போன செந்தில், சுரேஷ், சேகர் ஆகியோர்களையும் குமார்பாண்டியன், சக்திபாண்டியன் ஆகியோர்கள் எனக்கு நண்பர்கள் அல்ல இந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் அவர்களை எனக்கு தெரியும்.